**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் சனிக்கிழமை**

**2058 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 05 -ம் நாள்**

**S.T.C.NO. 554 OF 2023**

**(CNR No.TNVP10-01508-2023)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | S.T.C.NO. 554 of 2023 |
| 2) | புகார்தாரர் மற்றும் முகவரி | : | A.R. பாலாஜி, வயது 50,<br>த/பெ A.B. ராமன்,<br>நெ.3/2, மணியம் கந்தசாமி வீதி,<br>திண்டிவனம் |
| 3) | எதிரியின் விவரம் | : | R.புருஷோத்தமன், வயது 45,<br>த/பெ ரங்கநாதன்,<br>நெ.32, சக்தி நகர்,<br>காலேஜ் ரோடு,<br>சலவாதி கிராமம்,<br>மேல்பாதி அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம். |
| 4) | சம்பவ தேதி | : | 07.11.2023 |
| 5) | முறையீடு | : | 03.11.2023 |
| 6) | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | ----- |
| 7) | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | ----- |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:14:56 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து வினவிய நாள் | : | 10.05.2024 | | |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | Witness | Date of Chief | Date of Cross |
| | | | PW-1 | 05.092024 | 07.08.2025, 19.08.2025, |
| | | | DW-1 | 30.10.2025, | 03.02.2026 |
| 11) | கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 22.08.2025 | | |
| 12) | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13) | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |
| 14) | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டம் 1881 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 255(1) -ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது. | | |
| 15) | காலதாமதத்தின் விளக்கம் | : | ---- | | |

இவ்வழக்கானது கடந்த 08.12.2023-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:03 +0530

எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 07.04.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. சுரேஷ், B.A..B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.R.K.செந்தில், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்,

## தீர்ப்புரை

**1) புகாரின் சுருக்கம்-**

புகார்தாரும், எதிரியும் நண்பர்கள். அதன் அடிப்படையில் எதிரி அவரது வியாபாரத்தை மேம்படுத்த புகார்தாரரிடம் 6 மாதத்திற்கு முன்பாக ரூபாய் 7,50,000/- கடன் பெற்று 12% வட்டியுடன் திருப்பி தருவதாக கூறியுள்ளார். எதிரி பணத்தை திரும்ப தரவில்லை. புகார்தாரர் பலமுறை கேட்ட பிறகு எதிரி 10.08.2-2023 தேதியிட்ட காசோலை எண்.019366 தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, திண்டிவனம் கிளையின் காசோலையை கொடுத்துள்ளார். காசோலை இரண்டு மாதம் கழித்து வசூலுக்கு செலுத்துமாறு எதிரி கூறியுள்ளார். அதன்படி 12.10.2023 அன்று புகாதாரர் அவர் கணக்கு வைத்துள்ள திண்டிவனம் கிளை டிபிஎஸ் வங்கியில் காசோலை வசூலுக்கு செலுத்தியுள்ளார். அந்த காசோலை 13.10.2023 அன்று போதிய பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது. புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலமாக 18.10.2023 தேதியிட்ட சட்ட அறிவிப்பு எதிரிக்கு அனுப்பியுள்ளார். எதிரி அதைப் பெற்றுக் கொண்டு பதில் அனுப்பவில்லை தொகையும் திரும்ப செலுத்தவில்லை.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:10 +0530

எனவே, எதிரி மீது மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 -ன் கீழான குற்றச்சாட்டின் படி புகாரை வழக்கு கோப்பிற்கு எடுத்து எதிரிக்கு அழைப்பானை அனுப்பி விசாரணைக்கு பின் எதிரியை தண்டித்து இழப்பீடு தொகை பெற்று தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

2. புகார் மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலித்து போதிய முகாந்திரம் உள்ளதால் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவுகள் 138 உடன் இணைந்த 142 ன் கீழ் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. புகார் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது. எதிரி ஆஜரானவுடன் புகார் மற்றும் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 கீழே உள்ள குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து வினவியபோது எதிரி "பொய் வழக்கு" என குறிப்பிட்டுள்ளார். பின்னர் புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

4. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 10.08.2023 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி திண்டிவனம் கிளை காசோலை எண்.019366 ம.சா.ஆ.1 ஆகவும், 13.10.2023 தேதியிட்டு எதிரி வங்கி கணக்கில் போதிய

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.18 06:15:16 +0530

பணம் இல்லை என திருப்பட்ட வங்கி மெமோ ம.சா.ஆ.2 ஆகவும், 18.10.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3 ஆகவும், எதிரி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும், 04.11.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரரை 07.08.2025 மற்றும் 19.08.2025 ஆகிய இரு தினங்களில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

5. எதிரி தரப்பில் எதிரி எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு 7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 24.07.2013, 07.05.2014 வரையிலான ஸ்ரீ சண்முகா சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் ஏலச்சீட்டு புத்தகம் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆகவும், 2302.2015, 13.12.2015 தேதியிட்ட ஸ்ரீ சண்முகா பைனான்ஸ் ரசீதுகள் எண்ணிக்கை 5 சான்றிட்ட நகல் எ.சா.ஆ.2 ஆகவும், 18.08.2023 காசோலை எண்.019367 தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி திண்டிவனம் கிளை சார்பாகவும் 27.10.2023 டிஆர்எஸ் பிரபு வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு சான்றிட்ட நகல் எ.சா..4 ஆகவும், 04.11.2023 தேதியிட்ட எதிரி பிரபுக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் எ.சா.ஆ.5 ஆகவும், 20.11.2023 டிஆர்எஸ் பிரபு எதிரின் மீது தாக்கல் செய்த புகாரின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.6 ஆகவும், 22.10.2024, 15.07.2025, 19.07.2025 ஆகிய தேதிகளில் எச்டிசி 59/2024 வழக்கில் ம.சா.1 பிரபு முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் தரப்பில் எதிரி 03.02.2026 அன்று குறுக்கு விசாரணை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:23 +0530

செய்யப்பட்டுள்ளார்.

6. புகார்தாரர் தரப்பு சாட்சியத்திற்கு பின்னர் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) BNSS-ன் கீழாக வினவியபோது எதிரி "பொய் சாட்சி கடன் பெறவில்லை அறிவிப்பு வந்தது நான் எனது இரண்டு காசோலைகளை விஆர்எஸ் பிரபு என்பவரிடம் சீட்டு தொகைக்கு செக்யூரிட்டியாக கொடுத்தேன். பணத்தை திரும்ப கொடுத்த பிறகும் எனது காசோலைகளை திரும்பத் தரவில்லை புகார்தாரர் யார் என்று தெரியாது முதல் முதலில் கோட்டில் பார்க்கிறேன் எனது தரப்பில் சாட்சிகள் உள்ளது" என குறிப்பிட்டுள்ளார்.

7. **<u>தீர்மானிக்கப்படி வேண்டிய பிரச்சினைகள்</u>**

1. **மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவுகள் 118, 139 ன் கீழான சட்டமுறையான அனுமானம் புகார்தாரருக்கு வழங்கத்தக்கதா?**
2. **மேற்படி சட்டமுறையான ஆவணத்தை எதிரி மறுதளித்துள்ளாரா?**

8. **<u>இரு தரப்பு வாதங்கள்</u>**

புகார்தாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் எதிரி காசோலை கொடுத்து போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து சட்ட அறிவிப்பு அனுப்பிய போது பொய் சங்கதிகளை கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். காசோலையை பிரபு என்பவரிடம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், அது குறித்து எந்த புகார் அறிவிப்பும் கொடுத்ததாக எதிரி தரப்பில் தாக்கல்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:28 +0530

செய்யவில்லை. காசோலை ஸ்டாப் பேமென்ட் கொடுத்ததாகவும் குறிப்பிடவில்லை. எதிரி தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களுக்கும் இவ்வழக்கிற்கும் என்ன தொடர்பு என எதிரி தெளிவு படுத்தவில்லை. காசோலை மற்றும் அதில் உள்ள கையப்பத்தை எதிரி ஒப்பு கொண்டுள்ள நிலையில், அதனை மறுத்தலுக்கும் பொறுப்பு எதிரியுடையது. முறையான ஆவணங்கள் இன்றி Bare denial செய்வது மறுதளித்ததாக கருத இயலாது. பதில் அறிவிப்பில் காசோலையில் எண்கள் குறிப்பிடவில்லை. எனவே எதிரி சட்டமுறையான அனுமானங்களை மறுதளிக்கப்படாததால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து காசோலை தொகை இரட்டிப்பாக இழப்பீடு தொகையாக பெற்று தருமாறு வாதிட்டார். புகார்தாரர் தரப்பில் கீழ்கண்ட முன் தீர்ப்புகள் மேற்கோள்காட்டப்பட்டன:- 1) Judgment dated 31.07.2025 in Crl.M.C.No.133/2021, Crl.M.A.No.4950/2022, Ashokumar – Vs - State & another, by the Hon'ble High Court of Delhi, 2. Judgment dated 11.12.2025 in Crl.Rev.P(NI), 110/2025, Sh.Sureshkumar – Vs – Sh.Kuldeep Singh, by the Hon'ble High Court of Delhi, 3. (2026 INSC 40) ஆகிய முன் தீர்ப்புகள் மேற்கோள்காட்டப்பட்டன.

9. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்து எதிரி டிஆர்எஸ் பிரபு என்பவர் நடத்திய ஏலத்தில் சீட்டு போட்டதற்கு ஜாமீனாக இவ்வழக்கின் காசோலையும் மற்றொரு காசோலையும் பிரபு என்பவரிடம் கொடுத்துள்ளார். 2015-ம் வருடம் பணத்தை திரும்ப பைசல் செய்த பிறகு காசோலைகளை கேட்டபோது தருவதாக சொல்லி வந்த பிரபு என்பவர் ஒரு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:33 +0530

காசோலையை கொண்டு எஸ்.டி.சி நெ.59/2024 என்ற வழக்கையும் இன்னொரு காசோலையை கொண்டு அவரது நண்பர் இவ்வழக்கின் புகார்தாரர் மூலமாக இவ்வழக்கையும் தாக்கல் செய்துள்ளார். எதிரிக்கு புகார்தாரர் யார் என்று தெரியாது. முதல் முதலாக நீதிமன்றத்தில் தான் பார்த்துள்ளார். புகார்தாரர் எதிரிக்கு கடன் கொடுத்தது குறித்து நிரூபணம் செய்யவில்லை. அது குறித்த விவரங்களும் சொல்லவில்லை. எனவே எதிரி சட்டமுறையான அனுமானங்களை மறுதளித்துள்ளார் என கருதி எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார். எதிரி தரப்பில் கீழ்கண்ட முன் தீர்ப்புகள் மேற்கோள்காட்டப்பட்டன. 1. (2022)(3) MWN (Cr.) DCC 118 (Mad.), 2. (2025(2) MWN (Cr.) DCC 35(SC), 3. (2018 (3) MWN (Cr.) DCC 37 Ker.) 4. (2017(1) MWN (Cr.) DCC 97 (Mad.), 5. (2021(2) MWN (Cr.) DCC 85 (Mad.), 6.(2021) (2) MWN (Cr.) DCC 93) (Mad), 7. (2021)(2) MWN (Cr.) DCC 159 (Mad.), 8. (2025 (1) MWN (Cr.) DCC 186 (Mad.), 9. (2026 (INSC 40), 10. CRLMA No.4950/2022, Ashokumar Vs State by the Hon'ble High Court of Delhi Judgment dt.31.07.2025 ஆகிய முன் தீர்ப்புகள் மேற்கோள் காட்டப்பட்டன.

**10. சாட்சியப் பரிசீலனைகளும் தீர்வும்:-**

**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை - 1** மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவுகள் 118, 139-ன் கீழாக காசோலையில் உள்ள குறிப்புகள் குறித்து சட்ட முறையான அனுமானங்கள் புகார்தாரர்க்கு வழங்கத்தக்கதா? என்பதே ஆகும். இது குறித்து

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.18 06:15:40 +0530

பார்க்கையில் புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு 10.08.2023 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி திண்டிவனம் கிளையின் ரூபாய் 7,50,000 கான காசோலை எண்.019366 ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் காசோலை தனது வங்கி கணக்கு உடையது அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது எனவும் ஒப்புக் கொண்டுள்ளார். காசோலை மற்றும் காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரி ஒப்புக்கொண்டுள்ள நிலையில், காசோலையில் உள்ள தேதி, தொகை, பெறுபவர் பெயர் மற்றும் இதர குறிப்புகள் காசோலை சட்டப்படி வசூலிக்கக் கூடிய கடனுக்காக வழங்கப்பட்டது ஆகியவை மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118, 139-ன் கீழாக சட்ட முறையான அனுமானங்கள் புகார்தாரருக்கு வழங்கத்தக்கது என இந்நிதிமன்றம் கருதுகிறது.

11. **<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை - 2</u>** மேற்படி சட்ட முறையான அனுமானங்களை எதிரி மறுதளித்துள்ளாரா? என்பதே ஆகும். எதிரி இவ்வழக்கின் காசோலை மற்றும் ஒரு காசோலையை டிஆர்எஸ் பிரபுவிடம் சீட்டு எடுத்ததற்கு ஜாமீனாக கொடுத்ததாகவும், சீட்டு முடிந்த பிறகும் காசோலைகளை திரும்பத் தரவில்லை எனவும், புகார்தாரர் யார் என்று தெரியாது எனவும், கடன் பெறவில்லை எனவும் வாதம் முன் வைத்துள்ளார். இதுகுறித்து பார்க்கையில் ம.சா.ஆ.5 பதில் அறிவிப்பில் எதிரிக்கு புகார்தாரரை தெரியாது, காசோலையை பிரபுவிடம் சீட்டு தொகை ஜாமீனுக்காக கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:47 +0530

12. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் ம.சா.1 கடன் தொகை கொடுத்த தேதி 6 மாதத்திற்கு முன்பு என குறிப்பிட்டுள்ளதாகவும், காசோலையை எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என புகாரில் குறிப்பிட்ட தேதி சொல்லவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். டி ஆர் எஸ் பிரபு தான் வசிக்கும் தெருவில் நான்கு வீடுகள் தள்ளி உள்ளதாகவும், 14 வருடங்களாக பழக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார். தனது அப்பா மாவட்ட தொழில் மையத்தில் இணை இயக்குனராக பணியில் இருந்தார் தற்போது இறந்துவிட்டார் எனவும், தனது அப்பாவுக்கும் தனது தெருவில் இருக்கும் சண்முகம் என்பவருக்கும் பழக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார், எனினும் மேற்படி சண்முகம் பிரபுவின் அப்பாவா? என்பது தனக்குத் தெரியாது என குறிப்பிட்டுள்ளார். ம.சா.1 எதிரியின் வீட்டில் எத்தனை குடும்ப நபர் என தெரியாது எனவும், தான் எதிரி வீட்டுக்கு சென்றதில்லை எனவும், எதிரியிடம் இதுவரை தான் போனில் பேசியது இல்லை எனவும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியை 4, 5 முறை சந்தித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். வழக்கின் காசோலைத் தொகையை தன் வீட்டில் வைத்திருந்த சேமிப்பு தொகை என குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் பதில் அறிவிப்பு எதிரி கொடுத்தார் எனவும், அதில் உள்ள விவரம் தனக்குத் தெரியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். எதிரி பதில் அறிவிப்பு அனுப்பிய பிறகு இது குறித்து டிஆர்எஸ் பிரபுவிடம் கேட்கவில்லை எனவும், அவரை நீதிமன்றத்தில் ஒரு முறை பார்த்ததாகவும் விசாரிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். வழக்கில் காசோலையை எதிரி பிரபு என்பவரிடம் சீட்டு நிறுவனத்தில் சேர்ந்த போது பாதுகாப்புக்காக கொடுத்தார் எனவும், பிரபு அந்த காசோலை தன்னிடம் கொடுத்து

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:54 +0530

வசூலுக்கு செலுத்தப்பட்டு இவ்வழக்கினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற கேள்வியை ம.சா.1 மறுத்துள்ளார்.

13. எ.சா.1 அவரது சாட்சியத்தில் புகார்தாரரை இதற்கு முன்பு பார்த்ததில்லை, நீதிமன்றத்தில் முதல் வாய்தாவின் போது தான் புகார்தாரரை பார்த்ததாகவும், அவரிடம் எந்த கடன் தொகையும் பெறவில்லை எனவும், 2013 ஆம் வருடத்தில் பிரபு என்பவர் நடத்தி வந்த ஸ்ரீ சண்முகா பைனான்சில் சீட்டு செய்ததற்காக காசோலைகள் எண். 0 19366, 019367 ஆகிய காசோலைகளை பிரபு என்பவரிடம் கொடுத்ததாகவும், 2015 ம் வருடத்தில் சீட்டுத் தொகை முழுவதும் கட்டி முடித்த பிறகு காசோலை திரும்ப கேட்டபோது பிரபு பைனான்ஸ் நட்டத்தில் இயங்கி வருவதாகவும், பின்னர் தருவதாகவும் கூறியுள்ளார். எனினும் பிரபு காசோலைகளை திரும்பத் தரவில்லை அதில் ஒரு காசோலையை வைத்து பிரபு என்பவர் STC No.59/2024 என்ற வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்து நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மற்றொரு 019366 எண்ணிட்ட காசோலையை பிரபு அவரது நண்பர் இவ்வழக்கின் புகார்தாரரான பாலாஜியிடம் கொடுத்த இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் எ.சா.1 இவ்வழக்கில் புகார்தாரர் தனக்கு பழக்கம் இல்லை எனவும், நீதிமன்றம் வரும்வரை புகாதாரரை தான் பார்த்ததில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். பதில் அறிவிப்பில் காசோலைகள் எண் குறிப்பிடவில்லை எனவும், காசோலை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை எனவும், வங்கியில் புகார் கொடுக்கவில்லை எனவும், எ.சா.ஆ.1 ஆவணத்தில் சக்தி நகர், காலேஜ் ரோடு,

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:15:59 +0530

சலவாதி மற்றும் எதிரியின் பெயர் மட்டும் உள்ளதாகவும், வேற எந்த விவரமும் நிரப்பப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

14. புகார்தாரர் தரப்பில் செய்துள்ள முன் தீர்ப்புகளில் காசோலையில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ள நிலையில், அதில் உள்ள குறிப்புகள் குறித்து சட்டம் முறையான அனுமானங்கள் வழங்க வேண்டும் எனவும், புகார்தாரர் முதல் நிலையில் கடன் தொகை நிலுவையில் உள்ளதை நிரூபணம் செய்ய வேண்டியது இல்லை எனவும், கடன் தொகை நிலுவையில் இல்லை என்பதை எதிரி நிரூபணம் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

15. எதிரி தாக்கல் செய்யப்பட்டுள்ள முன் தீர்ப்புகளில் சட்ட அறிவிப்பு பெறப்பட்ட தினத்தில் இருந்து 15 நாட்கள் முடிவதற்கு முன்பே தாக்கல் செய்யப்பட்டுள்ள புகாரானது நிலைக்கத்தக்கது அல்ல எனவும், எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தின் அடிப்படையில் சட்டப்படியான வசூலிக்கப்பட வேண்டிய கடன் கொடுக்கப்பட்டதா? என்பதை தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

16. வழக்கின் காசோலை 2013-ம் வருடம் பிரபு என்பவரிடம் சீட்டு ஜாமீனுக்காக கொடுத்ததாக எதிரி குறிப்பிட்டுள்ள நிலையில், வழக்கின் காசோலை 2023 வருடத்திற்குரியது அல்ல என்பதற்கு ஆதாரமாக எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமும்

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.18 06:16:05 +0530

முன்னிடப்படவில்லை. மேலும் சீட்டு முடிந்த பிறகும் ஜாமீனுக்காக கொடுத்த இரண்டு காசோலைகளை பிரபு திரும்பத் தரவில்லை என குறிப்பிட்டுள்ள நிலையில், இது குறித்து பிரபு என்பவருக்கு எதிரி எந்த அறிவிப்பும் கொடுத்ததாக முன்னிடப்படவில்லை. காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை, வங்கியிலும் Stop Payment கொடுக்கவில்லை என அவரது குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளார்.

17. இவ்வழக்கில் எந்த தேதியில் கடன் கொடுக்கப்பட்டது, எந்த தேதியில் காசோலை எதிரி புகார்தாரருக்கு கொடுத்தார் என்பது குறித்து புகார்தாரரர் குறிப்பிட்ட தேதி புகார் மனுவிலும் சாட்சியத்திலும் சொல்லவில்லை. 6 மாதத்திற்கு முன்பு பணம் கொடுத்ததாக மட்டும் குறிப்பிட்டுள்ளார். புகார்தாரரர் தரப்பு சாட்சியத்தின்படி ரூபாய் 7,50,000/- கொடுத்த தினத்தன்று எதிரி புகாதாரருக்கு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. 6 மாதம் கழித்து கழித்து கேட்டபோது எதிரி வழக்கின் காசோலையை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார். கடன் கொடுத்த தேதி, காசோலை கொடுத்த தேதி, புகார்தாரரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்லபலடவில்லை.

18. புகார்தாரரர் அவரது தெருவில் நான்கு வீடுகள் தள்ளி உள்ள பிரபு என்பவரிடம் 14 வருடங்களாக பழக்கம் என குறிப்பிட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் வழக்கின் காசோலையை பிரபுவிடம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், இது குறித்து பிரபுவிடம் எதுவும் கேட்கவில்லை என

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.18 06:16:17 +0530

சாட்சியம் அளித்துள்ளார். மேலும் ம.சா.1 அவரது தெருவில் வசிக்கும் பிரபு மற்றும் சண்முகம் என்பவர்களை தெரியும் எனவும், எனினும் சண்முகம் பிரபுவின் அப்பா என்பது தெரியாது என குறிப்பிட்டுள்ளார்.

19. ம.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் இப்புகார் தாக்கல் செய்த பிறகு பதில் அறிவிப்பு வந்ததாக குறிப்பிட்டுள்ளார். புகாரில் பதில் அறிவிப்பு ஆறாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பார்க்கையில் வழக்கின் புகார் 03.11.2023 அன்று முதலில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு இப்புகாரானது குறைபாடுகளுக்காக திருப்பப்பட்டு மீண்டும் 21.11.2023 அன்று Re-present செய்யப்பட்டுள்ளது. புகாரில் ஆவணப்பட்டியலில் முதலில் நான்கு ஆவணங்கள் குறிப்பிடப்பட்டு, பின்னர் அஞ்சலக ஒப்புதல் அட்டை மற்றும் பதில் அறிவிப்பு கையால் பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது.

20. வழக்கின் காசோலையை புகார்தாரரிடம் கொடுக்கவில்லை, பிரபு என்பவரிடம் சீட்டு தொகைக்கு ஜாமீனாக கொடுக்கப்பட்டது என்ற எதிரி தரப்பு வாதம் பதில் அறிவிப்பில் முதல் நிலையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் புகார்தாரர் எந்த தேதியில் கடன் கொடுக்கப்பட்டது, எந்த தேதியில் காசோலை கொடுக்கப்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு புகார் மனுவிலும், சாட்சியத்திலும் சொல்லவில்லை. 6 மாதத்திற்கு முன்பாக கடன் கொடுக்கப்பட்டதாக சொல்லி உள்ளார். எந்த தேதியில் இருந்து 6 மாதத்திற்கு முன்பு என்பதை சொல்லவில்லை.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:16:23 +0530

மா.சா.1 குறுக்கு விசாரணையில் எதிரியை நான்கு, ஐந்து முறை சந்தித்ததாக குறிப்பிட்டுள்ளார். நான்கைந்து முறை சந்தித்த நபருக்கு எந்த ஆவணமும் இன்றி ரூபாய் 7,50,000/- ரொக்கமாக கொடுத்ததாக ம.சா.1 குறிப்பிட்டுள்ளது வழக்கு குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது. மேலும் பதில் அறிவிப்பின் வழக்கின் காசோலை பிரபுவிடம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், தனது தெருவில் நான்கு வீடுகள் தள்ளி வசிக்கும் 14 வருட பழக்கம் உள்ள பிரபு என்பவரிடம் இது குறித்து கேட்கவில்லை என ம.சா.1 குறிப்பிட்டுள்ளார்.

21. எனவே மேற்படி காரணங்களினால் எதிரி சட்டமுறையான அனுமானங்களை Probable defense மூலம் மறுதளித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது. சட்ட முறையான அனுமானங்களை எதிரி மறுதளித்துள்ள நிலையில் புகாரினை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு புகார்தாரருக்குரியது. புகார்தாரர் இவ்வழக்கின் காசோலைத் தொகையை எதிரிக்கு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது, எந்த தேதியில் காசோலை கொடுக்கப்பட்டது என்பது குறித்து சொல்லவில்லை. காசோலை தொகையான ரூபாய் 7,50,000 கடனாக வழங்கியது குறித்து புகார்தாரர் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 142(1)(b) மற்றும் 138(c) ன்படியாக எதிரி சட்ட அறிவிப்பு பெறப்பட்டு 15 நாட்களுக்குள் காசோலையின் தொகையை செலுத்தாதபட்சத்தில் வழக்கின் மூலம் ஆரம்பித்து ஒரு மாத காலத்திற்குள் வழக்கு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:16:28 +0530

பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (2022 (3) MWN (Cr.) DCC 118 (Mad,) மற்றும் (2025(2) MWN (Cr.) DCC 35(SC) ஆகிய வழக்குகளில் சட்ட அறிவிப்பு கொடுத்து 15 நாட்கள் முடிந்த பிறகு தான் வழக்கின் மூலம் எழுவதாகவும் அதற்கு முன்பே தாக்கல் செய்யப்பட்ட புகார் நிலைக்கத்தக்கதல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 10.08.2023 தேதியிட்ட காசோலையை 12.10.2023 அன்று வசூலுக்கு செலுத்தப்பட்டு போதிய பணம் இல்லை என 13.10.2023 அன்று வங்கியில் போதிய பணம் இல்லை என மெமோ கொடுக்கப்பட்டுள்ளது. காசோலை திருப்பப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் 18.10.2023 தேதியிட்ட சட்ட அறிவிப்பு புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பியுள்ளார். ம.சா.ஆ.4 அஞ்சலக ஒப்புதல் அட்டையின் படி 23.10.2023 அன்று எதிரி சட்ட அறிவிப்பு பெற்றுக் கொண்டுள்ளார். ம.சா.ஆ.6 ன்படி 04.11.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு எதிரி அவரது வழக்கறிஞர் மூலமாக அனுப்பி உள்ளார். மேற்படி சட்டப்பிரிவுகளின்படி சட்ட அறிவிப்பு பெறப்பட்ட 23.10.2023 தேதியில் இருந்து 15 நாட்கள் கழித்து வழக்கின் மூலம் எழுவதாக உள்ளது. 15 நாட்கள் என்றால் 23.10.2023 முதல் 06.11.2023 வரை ஆகும். எனினும் 15 நாட்கள் முடிவதற்கு முன்பே இவ்வழக்கின் புகார் 03.11.2023 அன்று தினத்தன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, வழக்கின் மூலம் எழுவதற்கு முன்பே இப்புகாரானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இப்புகாரரானது மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவுகள் 138, 142 இன் கீழ் ஏற்புடையது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:16:34 +0530

23. வழக்கின் காசோலையில் உள்ள குறிப்புகள் குறித்து சட்ட முறையான அனுமானங்கள் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவுகள் 118, 139 கீழாக புகார்தாரருக்கு வழங்கப்பட்டது. மேற்படி சட்டமுறையான அனுமானங்களை எதிரி Probable defence மூலமாக மறுதளித்துள்ளார். அதனை புகார்தாரர் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை. மேலும் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவுகள் 138(c) மற்றும் 142(1)(b)-ன் படியாக சட்ட அறிவிப்பை எதிரி பெற்று 15 நாட்கள் முடிவதற்கு முன்பே வழக்கின் புகாரானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி காரணங்களினால் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக, எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டம் 1881 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 255(1) -ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.**

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் சனிக்கிழமை 18-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:16:39 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

**இணைப்பு:-**

**புகார்தாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| ம.சா.1 | திரு.A.R.பாலாஜி |

**மனுதாரர் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| ம.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 10.08.2023 | வங்கி காசோலை எண்.019366 | ம.சா.1 |
| ம.சா.ஆ.2 | 13.10.2023 | வங்கியின் திருப்புதல் மெமோ | ம.சா.1 |
| ம.சா.ஆ.3 | 18.10.2023 | வழக்கறிஞர் அறிவிப்பு | ம.சா.1 |
| ம.சா.ஆ.4 | 23.10.2023 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | ம.சா.1 |
| ம.சா.ஆ.5 | 04.11.2023 | பதில் அறிவிப்பு | ம.சா.1 |

**எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| எ.சா.1 | திரு.புருஷோத்தமன் |

**எதிரி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| எ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| எ.சா.ஆ.1 | 24.07.2013, 07.05.2014 | ஸ்ரீசண்முகி சிட்பண்ட்ஸ் பிரைவேட் லிட்., ஏலச்சீட்டு புத்தகம் (சான்றிட்ட நகல்) | எ.சா.1 |
| எ.சா.ஆ.2 | 23.02.2015 – 13.12.2015 | ஸ்ரீசண்முகி பைனான்ஸ் ரசீதுகள் எண்ணிக்கை - 5 (சான்றிட்ட நகல்) | எ.சா.1 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.18 06:16:44 +0530

| | | | |
|---|---|---|---|
| எ.சா.ஆ.3 | 18.08.2023 | காசோலை எண்.019367 TMB திண்டிவனம் கிளை (சான்றிட்ட நகல்) | எ.சா.1 |
| எ.சா.ஆ.4 | 27.10.2023 | TRS பிரபு வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு (சான்றிட்ட நகல்) | எ.சா.1 |
| எ.சா.ஆ.5 | 04.11.2023 | எதிரி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு (சான்றிட்ட நகல்) | எ.சா.1 |
| எ.சா.ஆ.6 | 20.11.2023 | TRS பிரபு எதிரி மீது கொடுத்த புகார் மனு (சான்றிட்ட நகல்) | எ.சா.1 |
| எ.சா.ஆ.7 | 22.10.2024, 15.07.2025, 19.07.2025 | STC No.59/2024 வழக்கில் ம.சா.1 பிரபு முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை (சான்றிட்ட நகல்) | எ.சா.1 |

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.18 06:16:50 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.